**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.07.2025**
**OS. No. 27/2022**
**வழக்கு சாட்சி PW.2–ராஜேஷ், த/பெ.செல்வராஜ்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) 1ம் வாதி என் தாயார் என்றால் சரிதான். 1ம் வாதி என் தாயார் இந்த வழக்கில் 1வது சாட்சியாக எனக்கும் சேர்த்து சாட்சியம் அளிப்பதாக தெரிவித்து, அதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் என்ன சங்கதிகள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளாரோ, அதே சங்கதிகள் குறித்துதான் நிரூபண வாக்குமூலம் அளித்து நானும் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்தை தான் என் தகப்பனார் செல்வராஜ் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளோம். இந்த வழக்கின் பிரதிவாதி என் தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

2) தாவா 1வது அயிட்ட சொத்தில் 2வது தாக்காக சொல்லப்பட்டுள்ள சொத்தில் தான் என் தந்தைக்கும், பிரதிவாதிக்கும் சரிபாதி பாகமாக பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணப்படி என் பாட்டி ரஞ்சிதம், சந்திரா மற்றும் என் அக்கா விமலா ஆகியோர் சேர்ந்து விடுதலை பத்திரம் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது பாகபிரிவினை ஏற்பட்ட பிறகு 7 வருடங்கள் கழித்து ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1வது அயிட்ட சொத்தில் 2வது தாக்கில் பொதுதடவழி பாக நிலத்தில் பொதுவில் பேர்பாதி பு.ஏ.0.0.1/2 என்று குறிப்பிடப்பட்டுள்து என்றால் சரிதான். அதன் அளவு 1/2 செண்ட் என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்திலும் மேற்கண்ட அளவு தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தாவாவில் 1வது அயிட்ட சொத்தில்

2 வது தாக்காக 1 சென்ட் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், பிரதிவாதியான என் சித்தப்பா அவரது இடத்தில் வீடு கட்டிவிட்டார், அதற்கு பின்னால் இருந்த நிலம் அவருக்கு பயன்படாது என்பதால் என் தந்தையிடம் ரூ.50,000/– பெற்றுக்கொண்டு அதை விற்றுவிட்டதால் அவ்வாறு காண்பித்துள்ளோம். என் தந்தை 21.08.2017 ல் இறந்துவிட்டார். என் தந்தை இறந்து 4 வருடங்கள் கழித்து தான் வா.சா.ஆ.2 விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். என் த ந்தை உண்மையாகவே மேற்கண்டவாறு சொத்து வாங்கியிருந்தால், அவர் இறந்த 4 வருடங்களுக்கு பிறகு ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.2 பத்திரத்தில் 1 சென்ட் நிலம் என்று காண்பித்திருப்போம் என்றும், அவ்வாறு எந்த சொத்தும் என் தந்தை பிரதிவாதியிடமிருந்து வாங்காததால் தான் நாங்கள் 1/2 சென்ட் நிலம் என்று வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் என் தந்தை எழுதி வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை, அதனால் எங்களுக்கு உண்டான பாகம் குறித்து மட்டும் வா.சா.ஆ.2 ஏற்படுத்திக்கொண்டோம்.

4) பிரதிவாதி எந்த நிலத்தையும், என் தந்தைக்கோ அவருக்கு பின் எங்களுக்கோ விற்கவில்லை என்றால் சரியல்ல, அவர் வீட்டிற்கு பின்னால் உள்ள நிலம் எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. என் தந்தை கூட்டுறவு வங்கியில் பணி செய்து வந்தார். என் தந்தைக்கு வங்கியில் பணி புரிந்ததால், எந்த சொத்து வாங்கினாலும், முறையாக ஆவணங்கள் பதிவு செய்து தான் வாங்கவேண்டும் என்று அவருக்கு தெரியும் என்றும், அதனால் தான் அவர் பாகபிரிவினையையும் முறையே பதிவு செய்த ஆவணம் மூலம் ஏற்படுத்திக்கொண்டார் என்றும், உண்மையாகவே 1/2 சென்ட் நிலம் கிரையம் பெற்றிருந்தால் அதையும் அவர் முறையாக பதிவு செய்து ஆவணம் செய்திருப்பார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என் சித்தப்பா என்பதால் அவரை எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். அவருக்கு அதிர்ச்சியான சம்பவம் குறித்து கேள்விப்பட்டால் அவ்வப்போது வலிப்பு ஏற்படும் என்றால் சரிதான்.

5) என் சித்தப்பா சாதாரண மனிதர் மற்றும் உடல் நலத்தில் பலவீனமானவர் என்பதால் அவர் ஆட்களுடன் அத்துமீறி நுழைந்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி மேச்சேரி காவல் நிலையத்தில் எங்கள் மீது புகார் கொடுத்து அதன் ரீதியாக காவல் நிலையத்தில் எங்களை மிரட்டியதாக சொல்லியதற்கு ஆவணங்களை எதையேனும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேச்சேரி காவல் நிலையத்தில் எங்கள் மீது 03.11.2022ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.576/2022ன் முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பிணையில் வந்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 08.01.2022ம் தேதியில் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக சொல்வது தவறு என்றும், நாங்கள் தான் கடந்த 03.11.2022ம் தேதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சித்ததால் பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் எங்கள் மீது மேற்கண்ட குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6) பிரதிவாதி ஒருபோதும் சட்டத்திற்கு புறம்பாக எதுவும் செய்யமாட்டார் என்றும், சட்ட ரீதியாக தான் எதுவும் செய்வார் என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் 1வது தாக்கும், 2வது அயிட்ட சொத்து ஆகியவை தான் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம் என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்தில் 2வது தாக்கு குறித்து நாங்கள் கொடுத்துள்ள சொத்து விவரமே நாங்கள் தாக்கல் செய்த ஆவணத்திற்கு மாறாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் 2வது தாக்கில் பிரதிவாதிக்கு மட்டும் தான் உரிமை உள்ளதால் அதில் நாங்கள் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தில் பரிகாரம் கோர எங்களுக்கு உரிமை இல்லாததால் அவருக்கு ஆதரவாக தாவா தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.